தென் இந்தியத் திருச்சபை - கர்நாடக மத்திய பேராயம்

ஓய்வுநாட் பள்ளிசாலைத் துறை

கருப்பொருள்: இந்தப் பிள்ளையின் எதிர்காலம் என்னவாக இருக்குமோ?

வழிபாட்டிற்கு அழைப்பு:

மாற்கு 9:36-37-"ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக்கொண்டு, அவர்களுக்கு சொன்னதாவது, "இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்."

அல்லது

வாருங்கள், குழந்தைகளின் தூயத் தன்மையைக் கொண்டாடுவோம். இறைவனால் படைக்கப்பட்ட பிள்ளைகள் நாம் எனவே அவரை நாம் வழிபடுவோம் மற்றும் கனம்பண்ணுவோம்.

பாடல்:

இறைவனைப் போற்றுதல் / நன்றி செலுத்துதல்:

நடத்துநர்: அன்பின் இறைவனே, உமது சாயலில் எங்களைப் படைத்ததற்காக, உமது உள்ளங்கையில் எங்களை செதுக்கி வைத்திருப்பதற்காக மற்றும் நாங்கள் தீவினைகள் செய்யாதிருக்க இடைவிடாமல் நினைவூட்டிக் கொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி. தூய வாழ்வினை நாங்கள் வாழ்ந்திட எங்களை வழிநடத்திடப் போவதற்காக உமக்கு நன்றி.

இறைவனே, நீர் நல்லவராக இருப்பதற்காக உமக்கு நன்றி மற்றும் உம்முடைய அன்பு என்றுமுள்ளது / "இயேசு எந்தன் நேசரே," ஒரு சரணம் மட்டும்.

நடத்துநர்: இறைவனே, நாங்கள் தவறான பாதையில் சென்றுக் கொண்டிருந்தப்பொழுது சரியான வழியைக் காண்பித்தமைக்காக உம்மை நாங்கள் போற்றுகிறோம். நீர் எங்களது விரோதிகளை நாங்கள் மன்னிக்க உதவிசெய்தீர், அவர்களை நாங்கள் பழிவாங்க நீர் அனுமதிக்கவில்லை மற்றும் உண்மைக்காக துணைநிற்க உதவி செய்தீர்.

உம்மை எங்கள் முழுமனதோடு போற்றுகிறோம் / பாடல், ஒரு சரணம் மட்டும்.

நடத்துநர்: இறைவனே, நல்ல பெற்றோர், தாத்தா, பாட்டி, குடும்பம், போதிக்கிறவர்கள் மற்றும் நண்பர்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளதற்காக உமக்கு நன்றி சொல்லுகிறோம். அனுதினமும் நாங்கள் கல்விசாலைகளுக்கு பயணிக்கும்போதெல்லாம் எங்களை எல்லாவிதமான ஆபத்துகள் மற்றும் விபத்துகளிலிருந்து பாதுகாப்பதற்காக உமக்கு நன்றி. கல்விசம்பந்தமாக எங்கள் தேவைகளை சந்திப்பதற்காக உமக்கு நன்றி. எங்கள் பெற்றோர் மற்றும் அனுதினமும் எங்களை பாதுகாப்பாக பயணிக்கச்செய்யும் பள்ளி வாகனஓட்டுநர்களுக்காக உமக்கு நன்றி.

இறைவனே, உமது அற்புதமான அன்பிற்காக உமக்கு நன்றி / பாடல், ஒரு சரணம் மட்டும்.

நடத்துநர்: இறைவனே, நீர் எங்களை வழிநடத்துவதற்காக, எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்காக, ஞானம் மற்றும் வலிமை தருவதற்காக, நாங்கள் கடந்துவரும் அனைத்து சவால்களிலிருந்து மீண்டுவர உதவுவதற்காக உமக்கு நன்றி. இறைவனே, நீர் எங்களை அனைத்து திறமைகள் மற்றும் வெகுமதிகளினால் நிரப்பியுள்ளதற்காக, மற்றும் மகிழ்ச்சியூட்டும் அனைத்து ஆசீர்வாதங்களுக்காக உம்மை வழிபடுகின்றோம். நீர் எங்கள் வாழ்வில் கொடுத்திருக்கும் வாய்ப்புகளுக்காக உமக்கு நன்றி. எங்களது செயல்கள் மற்றும் விருப்பங்கள் பாவமானதாக இருந்தும் நீர் எங்களை ஏற்றுக்கொண்டும் மன்னித்துமிருப்பதற்காக உமக்கு நன்றி.

இறைவனே, நீர் இருக்கின்றவண்ணமாகவே இருப்பதற்காக உம்மை நாங்கள் கனப்படுத்துகிறோம் / பாடல்.

பாடல்

போற்றுதல்

பாவ அறிக்கை:

பிள்ளைகள் - மகா இரக்கமுள்ள இறைவனே, இன்று நாங்கள் பாவஅறிக்கை மன்றாட்டோடு உம்மிடம் வருகிறோம். நாங்கள் செய்த அநேக காரியங்கள் உமது பார்வையில் தவறானதாக இருந்தமைக்காக நாங்கள் வருந்துகிறோம். உம்மைவிட்டு வழிவிலகி சென்றிருக்கிறோம், எங்கள் பெற்றோர் மற்றும் எங்களுக்குப் போதிக்கின்றவர்களுக்கு நாங்கள் கீழ்ப்படியவில்லை. எங்கள் இல்லங்களில் மற்றும் சமுதாயத்திலிருக்கும் வயது முதிந்தவர்களை மதிக்க மற்றும் நேசிக்க நாங்கள் தவறிவிட்டோம். எங்கள் நண்பர்களை நேசிக்கும் மற்றும் மன்னிக்கும் திறனற்றோம். உலகப்பற்றில் ஈர்ப்புக் கொண்டதால் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். தயவாக உமது ஞானம் மற்றும் நிதானத்தின் ஆவியை எங்கள் உள்ளத்தில் ஊற்றும். உலகம்தரும் சந்தோஷத்தை எங்களுக்கு தூரமாக விலக்கிடும். உமக்கு அதிகதிகமாகக் கீழ்ப்படியவும் மற்றும் உம்மை அதிகதிகமாக நேசிக்கவும் எங்களுக்கு உதவியருளும். இனிவரும் நாட்களிலும் வருடங்களிலும் எங்கள் உள்ளத்தின் விருப்பங்களை நிறைவேற்றாமல் நீர் விரும்புவதை எங்களில் நிறைவேற்றியருளும். செம்மையான நண்பர்களை அடைய, சீறான முடிவுகளை எடுக்க, எங்களது சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் நல்லவைகளாக இருக்க எங்களுக்கு உதவிசெய்யும். எங்கள் ஆண்டவர் கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

பெற்றோர் - தூய இறைவனே, நீர் எங்கள் இல்லங்களில், திருச்சபைகளில் மற்றும் சமுதாயத்திலுள்ள பிள்ளைகளை ஆசீர்வாதமாக தந்தமைக்காக நன்றி. உமது சித்தத்தின்படி எங்களது பிள்ளைகளை வளர்க்க தவறியதை அறிக்கையிடுகிறோம். இறைவனே, நாங்கள் ஓய்வில்லாமல் எங்கள் பொறுப்புகளில் ஈடுபட்டிருந்ததால் மற்றும் நயமான நேரத்தை எங்கள் பிள்ளைகளிடம் செலவிட முடியாமல் இருந்தமைக்காக வருந்துகிறோம். பல நேரங்களில் அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துக்கொள்ள தவறிவிட்டோம். எங்கள் பிள்ளைகளுக்கு நிலையானதொரு உதாரணத்தை நாங்கள் நிறுவவில்லை. இறைவனே, எங்களை மன்னியும். இறைவனே, அவர்கள் வளர்ந்துவரும் தருணத்தில், அவர்களது வாழ்விற்காக சரியானவைகளை தேர்வுசெய்து, உமக்குப் பிரியமானவகையில் முடிவெடுக்க உதவிசெய்யும். நீர் எங்களை உருக்கி நாங்கள் அவர்களை சிறந்த மனிதப்பண்புகளைப் பெற்றிருக்கிறவர்களாக்கும் வகையில் போதிக்க உதவிசெய்யும். உமது வார்த்தையில் அவர்கள் வளர்ந்துவரவும் மற்றும் சமுதாயத்திற்கு உப்பாய் ஒளியாய் இருக்க அவர்களை உற்சாகப்படுத்தவும் நீர் எங்களுக்கு உதவிசெய்யும். எங்கள் ஆண்டவர் கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

பாவமன்னிப்பின் நிச்சயம்:

வேத பாடங்கள்

நியாயாதிபதிகள் - 13:1-14

சங்கீதம் - 119:9-16

எபேசியர் - 6:1-4

லூக்கா - 1:57-66

சிறப்பு பாடல்

அருளுரை

பரிந்துரை மன்றாட்டு:

வானுலகத் தந்தையே, இந்த நேரத்தில் பின்தங்கிய, பெற்றோரற்ற, ஊட்டச்சத்துக்குறைவின் காரணமாக உடல்நலம் குன்றியிருப்போர் மற்றும் எங்களைச்சுற்றி வீதியிலிருக்கும் பிள்ளைகளுக்காக மன்றாடுகிறோம். நீர் அவர்களோடு இருந்து அவர்களைப் பாதுகாத்தருளும். நீர் எங்களை ஆசீர்வதித்ததைப்போல அவர்களையும் ஆசீர்வதியும். நல்ல உணவைத்தந்து, நல்ல ஆரோகியத்துடன் அவர்களை ஆசீர்வதியும். பெற்றோரது அக்கறைக்காக ஏங்கும் அனைவருக்கும் உமது அன்பையும் ஆறுதலின் அனுபவத்தையும் தாரும். உம்முடைய மகா அன்பின் கரிசனைக்குள் அனைவரையும் நாங்கள் ஒப்புக்கொடுக்கிறோம்.

அனைத்தையும் படைத்தவரே, உமது கருணையும் இரக்கமும் தேவையிலிருக்கும் பிள்ளைகளை வழிநடத்துவதாக.

இறைவனே, குற்றத்திற்குள்ளான இளைஞர், தகாத வகைகளில் வியாபாரத்திற்காக கடத்தப்படும் பிள்ளைகள், குழந்தை தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் அபாயகரமான பணிசெய்யும் கட்டாயத்தை எதிர்நோக்கும் பிள்ளைகளுக்காக மன்றாடுகிறோம். இயேசுவே தயவாய் இவர்கள்மீது இரக்கமாயிரும். இவர்களது நிதிசார்ந்த

எல்லா தேவைகளையும் சந்தியும் மற்றும் பிணைக்கப்பட்ட தொழிலாளர்களாக இல்லாமல் அதற்குப் பதிலாக பள்ளிகளுக்குச் செல்ல அவர்களுக்கு உதவிசெய்தருளும். தகாத வகைகளில் வியாபாரம் செய்வோரின் கரங்களிலிருந்து இவர்களைப் பாதுகாரும். அரசாங்கம் இவர்களுக்கு முன்பாக வைத்திருக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள இவர்களுக்கும் மற்றும் இவர்களது பெற்றோருக்கும் உமது ஞானத்தைத் தாரும். இவர்கள் இச்சூழ்நிலையிலிருந்து வெளியே வந்து மற்றும் மகிழ்ச்சியான வாழ்வை நடத்திச்செல்ல உதவியருளும்.

இரக்கங்களின் இறைவனே, நீர்தாமே இப்பிள்ளைகள் எல்லோரையும் ஆசீர்வதித்து மற்றும் உணர்ச்சியூட்டி ஒரு சமாதானமான வாழ்வை நடத்திச்செல்ல அருள்புரிய உம்மிடம் மன்றாடுகிறோம்.

இறைவனே, இந்நேரத்திலும் குடும்பம்சார்ந்த வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் பிள்ளைகள், வீட்டிலிருந்து தப்பியோடி வந்த பிள்ளைகள், சீர்குலைந்த குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள், மற்றும் ஆற்றலிழந்த பிள்ளைகளுக்காக மன்றாடுகிறோம். இப்பிள்ளைகள் உமது பார்வையில் விலை உயர்ந்தவர்கள் மற்றும் எங்களால் நேசிக்கப்படுகிறவர்கள் என்பதை தெளிவாக அறிந்துக்கொள்ள உதவிசெய்யும்.

அதிகரித்துவரும் பாலினம் சார்ந்த வன்முறைகளுக்காக மற்றும் வேறுபாடுகளுக்காக, இன்னும் பிறவாத சிசுக்களுக்காக மற்றும் சிறு பெண் குழந்தைகளுக்காக மற்றும் பாலியல் பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் மன்றாடுகிறோம். இப்படிப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் அணுகக்கூடியவகையில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு கிடைப்பதாக.

வல்லமையுள்ள இறைவனே மற்றும் சமாதானத்தின் பிரபுவே, இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு தயவாக பாதுகாவலராகவும் கேடகமாகவும் இரும்.

அர்ப்பணிப்பின் மன்றாட்டு / பிள்ளைகளது ஒப்படைப்பு:

அன்புநிறைந்த வானுலகத் தந்தையே, இந்த சிறப்பான நாளில் உமது அதிக மதிப்புமிக்க கரங்களில் எங்களை ஒப்படைக்கிறோம் மற்றும் அர்ப்பணிக்கிறோம். உமது பிள்ளைகளாகிய எங்கள் வாழ்வில் நீர் செய்திருக்கும் அனைத்து நன்மைகளுக்காக நன்றி சொல்லுகிறோம். எங்களது பெற்றோர் தங்களது விலைமதிக்கமுடியாத நேரம், அன்பு மற்றும் கரிசனையை எங்களுக்குத் தந்ததைப்போல இன்று உமது சந்நிதியில் நாங்கள் எங்கள் வயோதிபப் பெற்றோரை கரிசனையோடு கவனித்துக் கொள்வோமென உறுதிமொழி எடுத்துக்கொள்ளுகிறோம். உமக்கு, எங்கள் பெற்றோர், வயதில்மூத்தவர்கள் மற்றும் எங்களுக்கு போதிக்கிறவர்களுக்குக் கீழ்ப்படிவோமென உறுதிமொழி எடுத்துக்கொள்ளுகிறோம். உமக்குப் பிரியமுள்ள வாழ்வை எல்லாக் காலங்களிலும் வாழ உதவிசெய்தருளும். அறிவுள்ளவர்களாக இருப்பதைக்காட்டிலும், வருங்காலத்தில் இறைவனை கனம்பண்ணுகின்றவர்களாக மாறி வாழ்ந்திட விரும்புகிறோம். நாங்கள் எதையும் சாதிக்குமுன் நல்லதொரு மனிதனாக / மனுஷியாக மாறிடுவோமென வாக்குறுதி கொடுக்கிறோம். சமுதாயத்தில் நாங்கள் தொடர்ந்து வாழும்நிலையில் எங்களைச்சுற்றி இருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமாதானம், அன்பு, மற்றும் நம்பிக்கையின் கருவிகளாக வாழ்வோமென உறுதிமொழி எடுத்துக்கொள்ளுகிறோம். உமது தூய ஆவியின் கனிகள் எங்கள் வழியாக எங்கள் கல்விசாலைகளில், குடும்பங்களில் மற்றும் சமுதாயத்தில் நீர் எங்களை எங்கெல்லாம் வைத்திருக்கிறீரோ அங்கெல்லாம் பாய்ந்தோடச் செய்யும். நாங்கள் சுயநலமுள்ளவர்களாக இல்லாமல் மாறாக பிறருக்காகவும் வாழ்வோமென வாக்குறுதி அளிக்கிறோம். இன்று செய்த அர்ப்பணிப்பில் நாங்கள் உறுதியாக நிற்க உதவிசெய்து, எங்களது மன்றாட்டுகளை ஏற்றுக்கொள்ளும்.

எந்தன் தீபத்திற்கு எண்ணெய் தாரும் .....(பாடல்).

பாடல்

கர்த்தருடைய மன்றாட்டு

இறையாசி.